# இருகூர் பேரூராட்சி

## கோயம்புத்தூர் மாவட்டம்

**ந.க.எண்.5/2022/ஆ** **நாள்:10.05.2022**

## 2020-21ம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதி திட்டம் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கோயம்புத்தூர் மாவட்டம், இருகூர் பேரூராட்சியில் **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதி திட்டம்** நிதி திட்டத்தில் வேலைகள் செய்வதற்கு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இணைப்பில் கண்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் எதிர்வரும் 2022 ம் ஆண்டு மே மாதம் 25ம் தேதி (25.05.2022) புதன்கிழமை மாலை 3.00 மணி வரை பேரூராட்சி செயல்அலுவலராலோ அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவராலோ பெற்றுக் கொள்ளப்படும். அன்றைய தினமே ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மாலை 3.30 மணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். அதற்கான ஒப்பந்தப்புள்ளி அட்டவணைகள் 24.03.2022க்குள் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளி இணையத்தளங்களில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**(https://tntenders.gov.in, https:// tenders.tn.gov.in)**

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில் ) | வைப்பு தொகை | ஷெட்யூல் கிரயம் ரூ. |
|---|---|---|---|---|
| **1** | இருகூர் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14 பூசாரி பழனிமலைத் தேவர் வீதி பகுதியில் வடிகால்அமைத்தல் மற்றும் சிமெண்ட் சாலை புதுப்பித்தல் | ரூ.13.00 | 13,000/– | 6000/- + 18%GST-1080/- =7080/- |

## நிபந்தனைகள்:

1. ஒப்பந்தப்புள்ளி கொடுக்க விரும்புகின்றவர்கள் வைப்புத் தொகையாக வேலையின் மதிப்பீட்டு தொகையில் 1 சதவீதத் தொகையை 25.05.2022ம் தேதி அன்று பிற்பகல் 3.00 மணிக்குள் பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி செலுத்துச் சீட்டு பெற்றுக்கொள்ள வேண்டும். பெற்றுக் கொள்ளப்பட்ட செலுத்து சீட்டினை பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும். உறையின் மேல் வேலையின் பெயரை குறிப்பிட வேண்டும்.
2. ஒப்பந்தப்புள்ளி படிவம் வேண்டுவோர் அட்டவணையில் கண்டுள்ள தொகையை 24.05.2022 மாலை 3.00 மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் ரொக்கமாக செலுத்தி நேரில் பெற்றுக் கொள்ளலாம். அதன் பிறகு வரும் விண்ணப்பங்களும் கோரிக்கைகளும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
3. மேற்படி நிபந்தனைகளின்படி வரப்பெறாத ஒப்பந்தப்புள்ளிகளும், குறிப்பிட்ட கால நேரத்திற்குப்பின் காலம் கடந்து வரப்பெறும் ஒப்பந்தப்புள்ளிகளும் நிராகரிக்கப்படும்.
4. ஒப்பந்தப்புள்ளி அழைப்பு நாள் எதிர்பாராத விதமாக விடுமுறை நாளாக இருந்தால், அடுத்த அலுவலக நாளில் அதே நேரத்தில் திறக்கப்படும்.
5. அட்டவணை ஒப்பந்தப்புள்ளிகள் அடித்தல், திருத்தங்கள் இல்லாமல் தெளிவாக எழுதி அடியில் ஒப்பந்ததாரரால் கையொப்பமிட்டு அனுப்பப்பட வேண்டும். அடித்தல், திருத்தங்கள் இருந்தால் அந்த இடத்தில் ஒப்பந்ததாரர் சுருக்கொப்பம் இட்டு அனுப்பப்பட வேண்டும். ஒப்பந்ததாரரின் கையொப்பம் இல்லாத ஒப்பந்தப்புள்ளிகள் செயல் அலுவலரால் நிராகரிக்கப்படும்.
6. பொதுவாக குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படும்.
7. ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டவையாகும்.
8. ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக் கொள்ளவும், நிராகரிக்கவும் பேரூராட்சி மன்றதிற்கு உரிமை உண்டு.
9. வேலை உத்திரவு கிடைக்கப்பெற்ற 3 தினங்களுக்குள் ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 50/– மதிப்புள்ள முத்திரைத்தாளில் சம்பந்தப்பட்ட வேலையை குறிப்பிட்ட காலத்திற்குள் M.D.S.S. மற்றும் S.S.R.T.-ன்படி திருப்திகரமாக செய்து முடிக்கும் பொருட்டு செயல் அலுவலரிடம் உரிய படிவத்தில் பத்திரம் ஒன்று எழுதிக் கொடுக்க வேண்டியது. தவறினால் வேலை உத்திரவு இரத்து செய்யப்பட்டு வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும்.

10. வேலை நடைபெறும் இடங்களில் திட்டத்தின் பெயர், வேலையின் பெயர், மதிப்பீட்டுத் தொகை, வேலை உத்திரவு வழங்கப்பட்ட நாள், வேலையை செய்து முடிக்கும் நாள் மற்றும் ஒப்பந்ததாரர் பெயர் குறித்த அறிவிப்பு பலகை கண்டிப்பாக நடப்பட வேண்டும்.

11. வேலை நடைபெறும் முன்பும், வேலை நடைபெறும் பொழுதும் மற்றும் வேலை முடிவுற்ற பின்பும் புகைப்படங்கள் எடுத்துக் கொடுக்க வேண்டும்.
12. வேலையின் மதிப்பீட்டுத் தொகையில் 0.3% சதவீதம் தொகையினை தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல சந்தா தொகையாக வங்கி வரைவு மூலம் வேலை உத்திரவு வழங்கப்பட்ட மூன்று நாட்களுக்குள் செயல் அலுவலரிடம் வழங்க வேண்டும்.
13. வேலைக்கு பயன்படுத்தப்படும் **பொருட்களுக்கு ISI தரச்சான்று பெற்று** அனைத்தும் உதவிப்பொறியாளர் அவர்களின் ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டும்.
14. இப்பணிகளில் தரைமட்டப் பணிகள் நடைபெறும் பொழுது **குடிநீர்த் திட்ட பைப்லைன் மற்றும் தொலைதொடர்பு கேபிள்கள் பழுதுபட்டால் ஒப்பந்ததாரரே தனது சொந்த பொறுப்பில் பழுது நீக்கம் செய்து** துறைக்கு ஒப்படைக்க வேண்டியது. நிர்வாகம் இதற்கு பொறுப்பேற்காது.
15. கட்டுமான வேலைகளுக்கு தேவைப்படும் தண்ணீரை ஒப்பந்ததாரரே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். அனுமதியின்றி பேரூராட்சி பொது குடிநீர் குழாய்களிலிருந்தோ அல்லது இதர குடிநீர் ஆதாரங்களிலிருந்தோ வேலைக்கு தண்ணீர் பயன்படுத்துவது கண்டறியப்பட்டால் மொத்த வேலையின் மதிப்பில் 1 சதவீதம் தண்ணீர் பயன்படுத்திய செலவிற்காக பட்டியலில் பிடித்தம் செய்து கொள்ளப்படும்.
16. வேலையை செய்ய ஒப்பந்ததாரரால் ஈடுபடுத்தப்பட்டுள்ள யாதொரு நபருக்கு அல்லது வேலைகளுக்கு அல்லது போக்குவரத்து வாகனத்திற்கு இவ்வேலையைச் செய்யும் பொழுது ஏற்படும் சேதாரம் அல்லது தேய்மானம் ஆகியவற்றிற்கு இப்பேரூராட்சி நிர்வாகம் பொறுப்பேற்காது.
17. ஒப்பந்ததாரருக்கு தொழில்நுட்ப தகுதி இல்லாதிருந்தால் LCE/DCE/LCS படிப்பு முடித்த நபர் அல்லது ஓய்வு பெற்ற இளநிலை பொறியாளர் அல்லது LCS (Civil) போன்ற தகுதியுள்ள நபரை தொழில்நுட்ப உதவியாளராக இவ்வேலை நடைபெறும் இடத்தில் கண்டிப்பாக நியமிக்க வேண்டும். இவ்வாறு இளநிலை பொறியாளர் அவரது அதிகாரம் பெற்றவரால், செயல் அலுவலரால் அல்லது வேறு அரசு உயர் அதிகாரிகள் ஆய்வின் போது மேற்காணும் தகுதி உள்ள தொழில்நுட்ப உதவியாளர் இல்லாமல் வேலை நடைபெறுவது கண்டறியப்பட்டால் மறு அறிவிப்பின்றி ஒப்பந்ததாரருக்கு அபராதமாக ரூ. 1000/– விதிக்கப்படும்.
18. பேரூராட்சிகளின் உதவி செயற்பொறியாளர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் அல்லது சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளால் வேலை நடைபெறுவதை கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும், அளவுகள், மேலளவுகள் எடுக்கவும் உரிமையுண்டு.
19. பேரூராட்சிகளின் உதவிச் செயற்பொறியாளர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் அல்லது சம்பந்தப்பட்ட அரசு உயர் அதிகாரிகளின் கட்டளைப்படி வேலையினை MDSSன்படி (Madras Detailed Standard Specification) திருப்திகரமாக செய்து முடிக்க வேண்டும்.
20. வேலை முடிவுற்றப்பின் சம்பந்தப்பட்ட பொறியாளரால் அளவு, மேலளவு எடுத்து சரிபார்த்து தயாரித்து கொடுக்கப்படும் பட்டியலில் கண்டுள்ள தொகைக்கு உரிய பிடித்தங்கள் செய்து கொண்டு மீதமுள்ள தொகை காசோலை மூலம் நியமன காலக்கெடுவிற்குள் வழங்கப்படும். திட்டப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு தொகை கிடைத்த பின்புதான் தொகை வழங்கப்படும்.
21. மொத்த வேலையின் மதிப்பில் வருமான வரி 2 சதவீதம் மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி 12 சதவீதம் ஆகியவைகள் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட தலைப்புகளில் செலுத்தப்படும்.
22. இப்பணிகளுக்கான முன்பணங்கள் மற்றும் கட்டுமானப் பொருட்கள் ஏதம் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படமாட்டாது.
23. கூடுதல் முன்வைப்புத் தொகை (Additional Deposit) 5 சதவீதம் பிடித்தம் செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட தலைப்பில் செலுத்தப்படும்.
24. பின்வரும் காலங்களில் ஒப்பந்தப்புள்ளிகளின் மீது தணிக்கை மறுப்புகளோ அல்லது உயர் அதிகாரிகளின் கட்டளைப்படியோ தொகை பிடித்தம் செய்ய வேண்டியிருப்பின் ஒப்பந்ததரரால் செலுத்தப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி இட்டு வைப்புத் தொகைகளிலிருந்து அத்தொகை சரிசெய்து கொள்ளப்படும். வைப்புத் தொகை கணக்கிலுள்ள தொகைக்கு மேல் பிடித்தங்கள் இருப்பின், செயல் அலுவலரால் தெரிவிக்கப்படும் கால அளவிற்குள் ரொக்கமாக பேரூராட்சியில் செலுத்த ஒப்பந்ததாரர்கள் கட்டுப்பட்டவர்கள்.
25. ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்த அடிப்படையில் பெறப்பட்ட பணிகளை உள்ஒப்பந்தத்திற்கு கண்டிப்பாக விடக்கூடாது.
26. வேலை முடிவுற்ற பின் ஒப்பந்ததாரர்களால் வேலை நடைபெற்ற இடங்களில் விட்டுச் செல்லப்படும் பொருள்கள் ஒருவார காலத்திற்குள் அப்புறப்படுத்திக் கொள்ளவில்லை எனில் அவை பேரூராட்சியால் கைப்பற்றிக் கொள்ளப்படும்.
27. இந்நிபந்தனைகளுக்குட்படாமலும் உரிய காலக்கெடுவிற்குள் வேலையை முடிக்காத ஒப்பந்ததாரர்களுக்கு செயல் அலுவலர் தமக்கு தகுதியாய் தோன்றும் தொகையினை அபராதமாக விதித்து வசூலிக்க உரிமையுண்டு.

28. மேற்குறிப்பிட்ட கால அளவுக்குள் பணியை முடிக்காத ஒப்பந்ததாரர் அடுத்தப்படியாக வழங்க இருக்கும் ஒப்பந்தத்தில் கலந்து கொள்ள முற்றிலும் தகுதியற்றவர் ஆவார்.
29. உசிதம் போல் ஒப்பந்தப்புள்ளி தேதியை ஒத்திப்போடவோ அல்லது நிறுத்தி வைக்கவோ செயல் அலுவலருக்கு அதிகாரமுண்டு.
30. மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்ட ஒப்பந்ததாரர்கள் மட்டுமே மேற்படி வேலைக்கு ஒப்பந்தப்புள்ளி கொடுக்கலாம்.
31. மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மேல் உள்ள பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அளிக்க விருப்பமுள்ளவர்கள் கீழ்க்கண்ட இணையதளத்தில் ஒப்பந்தப்புள்ளி நமுனா நகல் எடுத்தும் உரிய கட்டணத்தை பேரூராட்சியில் செலுத்தியும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளலாம்.

இணையதள முகவரி : www.tenders.tn.gov.in, www.tntenders.gov.in

32. கூடுதல் விவரம் அறிய விரும்புவோர் அலுவலக வேலை நாட்களில் அலுவலக வேலை நேரத்தில் கேட்டுக் தெரிந்துகொள்ளலாம்.

செயல் அலுவலர்,
இருகூர் பேரூராட்சி
இருகூர் -641103